**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்**

**முன்னிலை–திருமதி. P. தீபா, B.A.B.L.L.L.M.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர், மாதவரம்**

**2026–ம் ஆண்டு ஜீலை மாதம் 15–ம் நாள் புதன்கிழமை**

**CC.No.116/2020**

**( CC.No. 6/2017 ( JMC, Tiruvottiyur ) in**

**CC.No.116/2020 ( DM CUM JMC Madhavaram )**

மாநில அரசு உதவி ஆய்வாளர் மூலமாக
எம்1 மாதவரம் காவல் நிலையம்
குற்ற எண்.406/2016

……குற்றமுறையீட்டாளர்/வாதி

// எதிர் //

ஜெ.குகன், வயது.28,
த/பெ. ஜெய்சங்கர்,
எண்.36, மதுரை,
மனவாளன் நகர்,
பொன்னியம்மன் மேடு,
சென்னை–110.

............எதிரி

**CASE SUMMARY**

| Sl.No | Particulars | Details |
|---|---|---|
| I. | Period of Remand of Accused | 29.03.2016 – 18.04.2016 |
| II. | Date of filling of Final Report in court | 12.01.2017 |
| III. | Date of questioning of accused under section 313(1) (a) of Cr.p.c | 16.03.2017 |
| IV | Filling of Miscellaneous petitions and their result | Nil |
| V. | Date of examination in Chief and cross examination of witnesses | PW1– 12.03.2025<br>PW2– 12.03.2025<br>PW3 – 03.04.2025<br>PW4 – 01.07.2026 |
| VI. | Date of examination of accused under section 313(1)(b) of Cr.p.c | 06.07.2026 |
| VII. | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay buy superior court and the result thereof | Nil |

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:37:26 +0530

இவ்வழக்கானது 12.01.2017–ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இறுதியாக 15.07.2026–ம் தேதி அன்று என் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.N.கலையரசி, அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

இவ்வழக்கில் கடந்த 27.03.2016–ம் தேதி பகல் 10.45 மணிக்கு எம்1 மாதவரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மாதவரம் கில்பன் நகர், விநாயகர் கோவில் அருகில் வாதி திருமதி. ராணி என்பவர் நடந்து வந்து கொண்டிருந்தபோது, வாதிக்கு பின்னால் நடந்து வந்த எதிரி தான் சுயலாபம் அடையும் பொருட்டு வாதியின் முகத்தில் மிளகாய் பொடியை தூவி, அவரது கழுத்திலிருந்த செயினில் ரூபாய்.28,500 மதிப்புள்ள சுமார் 15.200 கிராம் எடையுள்ள பாதி தங்க செயினை அறுத்து, கொள்ளையடித்து கொண்டு அவனது இருசக்கர வாகனத்தில் தப்பி சென்று எதிரி காரணமாக இருந்து குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது சட்டப்பிரிவு 392 இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எம்.1 மாதவரம் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரியிடம் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவண நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், எதிரி மீது இதச பிரிவு 392 கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் பற்றி வினவ எதிரி குற்றத்தை பொய் என மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**5. <u>அரசு தரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>**

**அ)** அ.சா.1 ராணி, தனது சாட்சியத்தில், தான் மாதவரம் பகுதியில் வசித்து வருவதாகவும், 27.03.2016 அன்று காலை 10.30 மணியளவில் தனது மகளின் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, கில்பன் நகர் அருகே பிள்ளையார் கோயில் அருகே மிளகாய் பொடி தூவி தனது கழுத்தில் இருந்த 4 ¼ சவரம் மதிப்புள்ள தங்க செயினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்றும், மிளகாய் தூள் தூவியதால் தன்னால் பார்க்க முடியவில்லை என்றும், இதுகுறித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகாரானது தான் அளித்ததுதான், மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்து, போலீசார் தன்னை விசாரணை செய்து, நகையை தான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தன்னுடையதுதான், மேற்படி புகைப்படமானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

**ஆ)** அ.சா.2 குமார், தனது சாட்சியத்தில், தான் மாதவரம் பகுதியில் வசித்து வருவதாகவும், 27.03.2016 அன்று காலை 11.30 மணியளவில் கில்பன் நகர் அருகே

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:37:31 +0530

பிள்ளையார் கோயில் அருகே மிளகாய் பொடி தூவி தனது தாயார் நடந்து சென்றபோது அவர் அணிந்திருந்த கழுத்தில் இருந்த 4 ¼ சவரம் மதிப்புள்ள தங்க செயினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்றும், மிளகாய் தூள் தூவியதால் எனது தயாரால் பார்க்க முடியவில்லை, அக்கம் பக்கத்தினர் அந்த நபரை பிடித்து அங்கு அருகில் இருந்த காவலரிடம் ஒப்படைத்தனர் என்றும், மேலும் தனது தாயாரின் செயினையும், அவரிடமிருந்து வாங்கி கொடுத்தார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

**இ)** அ.சா.3 ஆறுமுகம் தனது சாட்சியத்தில், தான் மாதவரம் பகுதியில் குடியிருந்து வருவதாகவும், 8–9 வருடஙக்ளுக்கு முன்பு கில்பன் நகர் அருகே தான் ஆட்டோ ஓட்டிக் கொண்டு வந்தபோது ஜங்ஷன் அருகே போலீசார் கூட்டமாக நின்று ஒரு பாட்டி செயினை அறுத்து சென்றது தொடர்பாக விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் இறங்கி சென்று என்னவென்று பார்த்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பத்தினை தன்னிடம் வாங்கினார்கள் என்றும், மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்து, போலீசார் தன்னை விசாரணை செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

**ஈ)** அ.சா.4 சிவகுமார், உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் தற்போது எம்.1 மாதவரம் காவல் நிலையத்தில் குற்றபிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர், திரு. அமல் ஸ்டேன்லி ஆனந்த் அவர்கள் பணி ஓய்வில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், 27.03.2016 அன்று காலை 11.45 மணிக்கு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக காவல் உதவி ஆய்வாளர் அமல் ஸ்டான்லி ஆனந்த் நிலைய பணியில் இருந்தபோது திருமதி. ராணி என்பவர் அளித்த புகாரினை பெற்று எம்.1 மாதவரம் காவல் நிலைய குற்ற எண். 406/2016 இதச பிரிவு 392 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்து, பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் மாலதி, ரத்தினம், குமார் ஆகியோரை விசாரித்து தனிதனி வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் அன்றைய தினமே சாட்சிகளான சங்கர், ஆறுமுகம் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து, அவை முறையே அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்து, பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் 29.03.2016 காலை 8 மணிக்கு மாதவரம் ரவுண்டானா அருகே எதிரி குகன் கைது செய்து சாட்சிகள் பத்மராஜ், சங்கர் அவர்கள் முன்னிலையில் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "என்னை கூட்டிச் சென்றால் மொண்டியம்மன் தெருவில் வீட்டில் ஒளித்து வைத்திருக்கும் இரண்டு நாள் முன்பு அருத்த பாதி செயினை எடுத்து தருகிறேன்" என்று கூறியதன் அடிப்படையில் வழக்கு சொத்தான அருந்த நிலையில் 15.200 கிராம் எடையுள்ள தங்க செயின் ஒன்றினை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும், மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகஜர் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்து, பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும்,

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:37:35 +0530

பின்னர் புகார்தாரரை மீண்டும் விசாரணைச் செய்து மறுவாக்குமூலம் பதிவுச் செய்து, இவ்வழக்கின் தடைய பொருளானது நீதிமன்றத்தில் படிவம் 95ன் மூலமாக சான்று பொருளாகவும் RP No. 94/2016, சம்பவத்திற்கு எதிரி பயன்படுத்திய அவரது இருச்சக்கர வாகனமான Hero Honda TN 05 AC 1496 வாகனமானது மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டு படிவம் 95 மூலமாக நீதிமன்றத்தில் Pl.No.29/2017 ஆக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி படிவம் 95னது (2 எண்ணிக்கை) அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்து, பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிமீது இதச பிரிவு 392 கீழ் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

**6)** இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.4 அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகளுக்கு எதிராக பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் வினவ எதிரிகள் அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினார். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7)** <u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>

**இவ்வழக்கின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளாவன எதிரியானவர் பிரிவு 392 இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளாரா என குற்றமுறையீட்டாளர் தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.**

இவ்வழக்கில் கடந்த 27.03.2016-ம் தேதி பகல் 10.45 மணிக்கு எம்1 மாதவரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மாதவரம் கில்பன் நகர், விநாயகர் கோவில் அருகில் வாதி திருமதி. ராணி என்பவர் நடந்து வந்து கொண்டிருந்தபோது, வாதிக்கு பின்னால் நடந்து வந்த எதிரி தான் சுயலாபம் அடையும் பொருட்டு வாதியின் முகத்தில் மிளகாய் பொடியை தூவி, அவரது கழுத்திலிருந்த செயினில் ரூபாய்.28,500 மதிப்புள்ள சுமார் 15.200 கிராம் எடையுள்ள பாதி தங்க செயினை அறுத்து, கொள்ளையடித்து கொண்டு அவனது இருசக்கர வாகனத்தில் தப்பி சென்று எதிரி காரணமாக இருந்து குற்றம்புரிந்துள்ளார். எனவே, எதிரி மீது சட்டப்பிரிவு 392 இதச பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்து, எதிரிகளுக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

**9)** எதிரிகள் தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்ற சம்பவத்தை பொறுத்து தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:37:40 +0530

**10)** அரசு தரப்பில் ப.சா.1 முதல் ப.சா.9 சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டபோதும், அரசு தரப்பில் அ.சா.1 ஆக புகார்தாரர் சாட்சியும், அ.சா.2 ஆக கண்ணுற்ற சாட்சியும், அ.சா.3 ஆக பார்வை மகஜர் சாட்சியும் மற்றும் அ.சா.4 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டன.

**11)** இவ்வழக்கின் புகார்தாரான அ.சா.1 ஆக அரசு தரப்பு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் " கில்பன் நகர் அருகே பிள்ளையார் கோயில் அருகே மிளகாய் பொடி தூவி தனது கழுத்தில் இருந்த 4 ¼ சவரம் மதிப்புள்ள தங்க செயினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்றும், மிளகாய் தூள் தூவியதால் தன்னால் பார்க்க முடியவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரானது தான் அளித்ததுதான், மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்து, நகையை தான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தன்னுடையதுதான், மேற்படி புகைப்படமானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்து " சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " நான் எதிரியை பார்த்தேனா என்றால் இல்லை என்றும், மிளகாய் பொடி தூவியதால் தெரியாது " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " கில்பன் நகர் அருகே பிள்ளையார் கோயில் அருகே மிளகாய் பொடி தூவி தனது தாயார் நடந்து சென்றபோது அவர் அணிந்திருந்த கழுத்தில் இருந்த 4 ¼ சவரம் மதிப்புள்ள தங்க செயினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்றும், மிளகாய் தூள் தூவியதால் எனது தயாரால் பார்க்க முடியவில்லை, அக்கம் பக்கத்தினர் அந்த நபரை பிடித்து அங்கு அருகில் இருந்த காவலரிடம் ஒப்படைத்தனர் என்றும், மேலும் தனது தாயாரின் செயினையும், அவரிடமிருந்து வாங்கி கொடுத்தார்கள் " என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " நான் சம்பவத்தின்போது அம்மாவுடன் இருந்தேனா என்றால் இல்லை என்றும், நான் எனது அம்மாவை பார்க்க சம்பவயிடம் சென்றபோது எதிரி அங்கு இருந்தாரா என்றால் இல்லை " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** அரசு தரப்பில் பார்வை மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 தனது சாட்சியத்தில் " கில்பன் நகர் அருகே தான் ஆட்டோ ஓட்டிக் கொண்டு வந்தபோது ஜங்ஷன் அருகே போலீசார் கூட்டமாக நின்று ஒரு பாட்டி செயினை அறுத்து சென்றது தொடர்பாக விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் இறங்கி சென்று என்னவென்று பார்த்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பத்தினை தன்னிடம் வாங்கினார்கள் என்றும், மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்து " சாட்சியம் அளித்துள்ளார. அ.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " நான் கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் இல்லை என்றும், நான்

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:37:45 +0530

கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது " என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.2, 3 சாட்சிகள் கண்ணுற்ற சாட்சிகள் என்பதிலிருந்து விலகி சம்பவயிட சாட்சியாகவே சாட்சியம் அளித்துள்ளனர்.

**14)** மேற்படி புகார்தாரர் சாட்சியான அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்து இருப்பினும் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " நான் எதிரியை பார்த்தேனா என்றால் இல்லை என்று சாட்சியம் அளித்து எதிரியை அடையாளம் தெரியாது என்றே சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அரசு தரப்பில் கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " நான் சம்பவத்தின்போது அம்மாவுடன் இருந்தேனா என்றால் இல்லை என்றும், நான் எனது அம்மாவை பார்க்க சம்பவயிடம் சென்றபோது எதிரி அங்கு இருந்தாரா என்றால் இல்லை " என்றே சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அரசு தரப்பின் கண்ணுற்ற சாட்சிகள் எவரும் வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே அரசு தரப்பு அ.சா.4 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் அ.சா.1–ன் புகாரினை பெற்று சம்பவயிடம் சென்று சாட்சிகளை புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்து அ.சா.ஆ.5 பார்வை மகஜர், அ.சா.ஆ.6 ஆக மாதிரி வரைபடம் தயார் செய்ததினை ஆவணமாக குறியீடு செய்து, சம்பவத்தை பொறுத்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பொறுத்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும் அவர் அலுவல் சாட்சி ஆவார். மேலும் இவ்வழக்கு சம்பவத்தினை பொறுத்து சம்பவ சாட்சிகள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் எவரும் அரசு தரப்பில் விசாரணை செய்து, அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜருக்கான சாட்சிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேற்படி புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிக்கு எதிரான வழக்கு நிரூபணம் செய்ததாக கருதுவது என்பது நீதியின் பால் உகந்தது அல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 392 இதச பிரிவின் கீழான குற்றசாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. எனவே எதிரி மேற்படி பிரிவுவின் கீழான குற்றத்தில் குற்றவாளி என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை குற்றவாளிக்கு அளிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

<u>முடிவாக</u>

i) எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 392 இதச கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிக்கு சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி

DEEPA P Digitally signed by DEEPA P Date: 2026.07.15 18:37:49 +0530

குற்றவாளி அல்ல என முடிவு செய்து குற்றவியல் நடைமுறைச்சட்டம் 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

ii) இவ்வழக்கின் வழக்கு சொத்தான Pl.No.94/2016, தேதி–13.04.2016 சுமார் 15.200 கிராம் எடையுள்ள அறுந்த நிலையில் உள்ள தங்க செயின் ஒன்று, மற்றும் மற்றொரு வழக்கு சொத்தான Pl.No.29/2017 தேதி–10.01.2017 TN05AC1496 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Passion Pro இருசக்கர வாகனம் ஆகிய வழக்கு சொத்தானது திருவெற்றியூர் நீதிமன்றத்தில் அதன் உரிமையாளர்களுக்கு இடைக்காலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதை இனி அவரே வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைபத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

iii) மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு பிணைமுறிவு ரத்தாக செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் வருடம் ஜீலை மாதம் 15–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:37:54 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | திருமதி. ராணி |
| அ.சா.2 | திரு. குமார் |
| அ.சா.3 | திரு. ஆறுமுகம் |
| அ.சா.4 | திரு. சிவகுமார், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.03.2016 | புகார் |
| அ.சா.ஆ.2 | 27.03.2016 | புகைப்படம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 27.03.2016 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 27.03.2016 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 27.03.2016 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 27.03.2016 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 27.03.2016 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.8 | 27.03.2016 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.9 | 13.04.2016 | படிவம் 95 ( 2 எண்ணிக்கை ) |

எதிரி தரப்பு சாட்சி : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**குறிப்பு**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.

2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்குச் சொத்துக்கான உத்தரவானது பகரப்பட்டது.

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.07.15 18:37:59 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**